இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27-06-2025

# சரியும் பா.ஜ.க. செல்வாக்கு!

நான்கு மாநிலங்களில் நடைபெற்ற இடைத்தேர்தலில் பா.ஜ.க. மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளது. தேர்தல் நடந்த ஐந்து தொகுதிகளில் ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற முடிந்தது. இது பா.ஜ.க.வின் சரிந்து வரும் செல்வாக்கைச் சொல்கிறது.

குஜராத், கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கம் ஆகிய நான்கு மாநிலங்களில் உள்ள ஐந்து சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு கடந்த ஜூன் 19 அன்று இடைத்தேர்தல் நடைபெற்றது. இதன் முடிவுகள் பா.ஜ.க.வுக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை.

**பா.ஜ.க.வின் கோட்டை என்று சொல்லப்படும் குஜராத் மாநிலத்தில் காதி, விசாவதார் ஆகிய இரண்டு தொகுதிகளில் இடைத்தேர்தல் நடந்தது. இதில் விசாவதார் தொகுதியை ஆம் ஆத்மி கட்சி கைப்பற்றி இருக்கிறது. காதி தொகுதியில் மட்டுமே பா.ஜ.க.வால் வெற்றி பெற முடிந்தது. காதி தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட ராஜேந்திர குமார், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரைவிட 39,452 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். காங்கிரஸ் கட்சியின் ரமேஷ்பாய் சாவ்தா இரண்டாம் இடத்தையும், ஆம் ஆத்மி கட்சியின் சாவ்தா ஜகதீஷ்பாய் கன்பத்பாய் மூன்றாம் இடமும் பிடித்துள்ளனர். காதி தொகுதியின் வாக்கு எண்ணிக்கையை முதலில் இருந்தே சொல்லாமல் வைத்திருந்தது தேர்தல் ஆணையம். இதனை சந்தேகத்துக்குரியதாக எதிர்க்கட்சிகள் சொல்லத் தொடங்கி உள்ளன.**

குஜராத்தின் மற்றொரு தொகுதியான விசாவதாரில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றுள்ளது. ஆம் ஆத்மி கட்சி சார்பில் போட்டியிட்ட அக்கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் இத்தாலியா கோபால், 75,942 வாக்குகள் பெற்று தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளரைவிட 17,554 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

விசாவதர் தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த பூபேந்திரபாய் கந்துபாய் பயானி திடீரென பா.ஜ.க. பக்கம் தாவிவிட்டார். பா.ஜ.க.வின் அழுத்தம்தான் அதற்குக் காரணம் என்று ஆம் ஆத்மி கட்சி குற்றம் சாட்டியது.

பூபேந்திரபாய் பதவி விலகியதால் விசாவதர் சட்டமன்றத் தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து இடைத்தேர்தலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பூபேந்திரபாய் தங்கள் பக்கம் வந்ததால் வெற்றி பெற்றுவிடுவோம் என்று பா.ஜ.க. நம்பியது. ஆனால் பா.ஜ.க. தோல்வியையே தழுவியது. இது பா.ஜ.க.வுக்கு எதிர்பாராத தோல்வியாகும். ஏழு முறையாக குஜராத் மாநிலத்தில் ஆட்சியில் இருந்தாலும் 2007 முதல் இந்த விசாவதர் தொகுதியில் பா.ஜ.க.வால் வெற்றி பெற முடியவில்லை. “பா.ஜ.க.வால் மக்கள் சலிப்படைந்து உள்ளனர் என்பதை இது காட்டுகிறது” என்று சொல்லி இருக்கிறார் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால்.

பஞ்சாப் மாநிலம் லூதியானா மேற்கு தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றுள்ளது. ஆம் ஆத்மி வேட்பாளர் சஞ்சீவ் அரோரா 35,179 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது காங்கிரஸ் கட்சி. மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது பா.ஜ.க. குஜராத் மாநிலத்தில் ஒரு தொகுதியிலும், பஞ்சாப்பில் ஒரு தொகுதியிலும் வென்றதை தங்களின் மாபெரும் வெற்றியாக அறிவித்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

கேரளாவின் நீலம்பூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். இங்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாவது இடத்தைப் பெற்றது. மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது பா.ஜ.க. காங்கிரஸ் வேட்பாளர் வாங்கிய வாக்குகள் 77,727. மார்க்சிஸ்ட் வேட்பாளர் பெற்ற வாக்குகள் 66,660. பா.ஜ.க. வேட்பாளர் வாங்கிய வாக்குகள் 8,648. பா.ஜ.க. டெபாசிட் இழந்துள்ளது கேரளத்தில்.

மேற்கு வங்கத்தின் காளிகஞ்ச் தொகுதி இடைத்தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். பா.ஜ.க. வேட்பாளரை விட 50 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றார் இவர்.

**இடைத்தேர்தல் நடைபெற்ற பஞ்சாப், மேற்கு வங்கம், கேரளா, குஜராத் (ஒரு தொகுதி) என அனைத்திலும் தோல்வியைத் தழுவி இருக்கிறது பா.ஜ.க. காங்கிரஸ், ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகள் தங்களது செல்வாக்கை மெய்ப்பிக்கும் தேர்தலாக இடைத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.**

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு நடைபெற்ற இடைத் தேர்தல்களில் எல்லாம் தொடர் தோல்வியையே பா.ஜ.க. சந்தித்து வருகிறது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஏழு மாநிலங்களில் 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் 10 இடங்களைக் கைப்பற்றியது பா.ஜ.க.வுக்கு எதிரான ‘இந்தியா’ கூட்டணி. இரண்டே இடங்களில்தான் பா.ஜ.க.வால் வெல்ல முடிந்தது. ஒரு இடத்தில் சுயேட்சை வேட்பாளர் வெற்றி பெற்றார்.

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி தொகுதியை தி.மு.க. கைப்பற்றியது. மேற்கு வங்கத்தில் நான்கு தொகுதிகளையும் திரிணாமுல் காங்கிரஸ் கைப்பற்றியது. இமாச்சலப் பிரதேசத்தில் இரண்டு தொகுதிகளை காங்கிரஸ் கட்சியும், ஒரு தொகுதியை பா.ஜ.க.வும் கைப்பற்றியது. உத்தரகாண்ட் மாநிலத்தில் இரண்டு தொகுதிகளையும் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியது. பஞ்சாப்பில் ஒரு தொகுதியை ஆம் ஆத்மி கட்சி கைப்பற்றியது. மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஒரு தொகுதியை பா.ஜ.க. கைப்பற்றியது. பீகார் மாநிலத்தில் நடந்த இடைத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளர் வென்றார். மத்தியப் பிரதேசம் நீங்கலாக மற்ற ஆறு மாநிலங்களிலும் பா.ஜ.க. படுதோல்வி அடைந்தது.

**2024 ஜூலை தேர்தல் முடிவும், 2025 ஜூன் தேர்தல் முடிவும் பா.ஜ.க.வின் செல்வாக்கு சரிவதையே காட்டுகின்றன.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.6.2025) திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் 273 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 1,00,168 பயனாளிகளுக்கு வழங்கிய நிகழ்வில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், பயனாளிகளுக்கு பயிர்க் கடன் வழங்கினார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் டி.எம்.கதிர்ஆனந்த், சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜி, ஏ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், திருமதி. அமுலுவிஜயன், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க. சிவசௌந்திரவல்லி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.6.2025), திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில், 273 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 1,00,168 பயனாளிகளுக்கு வழங்கிய நிகழ்வில், மண்டலவாடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு சுயஉதவிக் குழு வங்கிக்கடனுக்கான காசோலையை வழங்கினார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் டி.எம்.கதிர்ஆனந்த், சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜி, ஏ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், திருமதி. அமுலுவிஜயன், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க. சிவசௌந்திரவல்லி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.6.2025), திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

## தமிழ்நாடு அரசின் யு.பி.எஸ்.சி. முதல்நிலை

# தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டம்!

## மதிப்பீட்டுத் தேர்வுக்கான தேதி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 27-

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது துணை முதலமைச்சர் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப் பட்டது. அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2023--24க்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்துடன் இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காக பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச்செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 சிவில் சர்வீசஸ் பயின்று வரும் மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். இத்திட்டம் கடந்த 2023--ஆம் ஆண்டு முதல் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2024 மற்றும் 2025 -ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற யு.பி.எஸ்.சி முதல் நிலைத் தேர்வுகளில் முறையே 276 மற்றும் 315 நான் முதல்வன் ஊக்கத் தொகை பயனாளி மாணவர்கள் முதன்மைத் தேர்வு எழுத செய்யப்பட்டனர்.

இத்திட்டத்தின் படி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அதன் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக யு.பி.எஸ்.சி முதல் நிலைத் தேர்வு-2026-க்கு தயாராகும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான மதிப்பீட்டுத் தேர்வை 26.07.2025 அன்று நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன்மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 1000 தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் 7500 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படும்.

கடந்த ஆண்டைப் போலவே, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் கீழ் இயங்கி வரும் அகில இந்திய குடிமை பணிகள் பயிற்சி மையங்களுக்கான (ஆர்.ஏ.புரம் சென்னை, பாரதியார் பல்கலைக்கழகம் கோவை மற்றும் காமராஜர் பல்கலைக் கழகம் மதுரை) சேர்க்கை மதிப்பீடுத் தேர்வின் மதிப்பெண் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மேற்படி பயிற்சி மையங்களைத் தேர்வு செய்வதற்கான விருப்பம் கோரும் விண்ணப்பம் பின்னர் தனியாக வெளியிடப்படும்.

இந்த மதிப்பீட்டுத் தேர்வை எழுதி ஊக்கத் தொகை மற்றும் அகில இந்திய குடிமை பணிகள் பயிற்சி மையங்களுக்கான சேர்க்கை பெற விரும்பும் ஆர்வமுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், HTTPS://WWW.NAANMUDHALVAN.TN.GOV.IN என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விரிவான அறிவிக்கையைப் படித்து பார்த்து, 26.06.2025 அன்று முதல் விண்ணப்பிக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 10.07.2025 ஆகும்.

**முக்கிய நாட்கள்**

அறிவிப்பு வெளியிடப் பட்ட தேதி- 26.06.2025. ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் தேதி - 26.06.2025. விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி - 10.07.2025. நுழைவுச் சீட்டு வெளியீடுப: ஜூலை மூன்றாவது வாரம். தேர்வு நாள் : 26.07.2025 (10.00 AM - 12.00 PM).




சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில், பகுதி கழக செயலாளர் வை.ம.அருள்தாசன் தலைமையில் கலைஞர் அவர்களின் 102 பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவி வழங்கும் விழா மற்றும் நான்கு ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் 1வது வட்ட பகுதியில் தாழங்குப்பம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் மு.சிவக்குமார் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக வருகை தந்த கழக அமைப்பு செயலாளர் ஆர் எஸ் .பாரதி, சென்னை வடகிழக்கு மாவட்டம் கழக செயலாளர் மாதாவரம் எஸ்.சுதர்சனம், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி எம்.பி., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் பகுதி கழக பொறுப்பாளர் எஸ். மோகன், திருவொற்றியூர் மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணி நிர்வாகிகள் துணை நிர்வாகம் என அனைத்து கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் பாகமுகவர்கள் கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் கழந்து கொண்டு சிறப்பித்தனர்.